


# ஜித்தா - காயல் நலமன்றம்

ஜித்தா - சவுதி அரேபியா

## மக்கா- காயல் ஹஜ் சேவை மற்றும்

## வழிகாட்டு அமைப்பு

ஏக இறைவனின் திருப்பெயரால்...........

கண்ணியமிக்க காயல் சகோதர சகோதரிகளே!அஸ்ஸலாமு அலைக்கும்!!

இறைவனின் மாபெரும் கிருபையால் அல்லாஹ் நம் மீது விதித்த கடமைகளில் ஐந்தாம் கடமையாகிய ஹஜ்ஜை நிறைவேற்றும் உயரிய நோக்கில் வல்லோனின் இல்லமாம் கஃபாவை தரிசிக்க புனித மக்காவிற்கு வருகை தரும் நம் காயல் நகர சொந்தங்களை இந்த புனித பூமியில் இருந்து வரவேற்பதில் எங்கள் ஜித்தா காயல் நல மன்றத்தில் மக்கா-காயல் ஹஜ் சேவை மற்றும் வழிகாட்டு அமைப்பு மிக்க மகிழ்ச்சியடைகிறது. அல்ஹம்துலில்லாஹ்!

புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற வரும் காயல் நகர ஹாஜிகளுக்கு சேவை மற்றும் வழிகாட்டும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள இவ்வமைப்பின் அமைப்பின் சார்பில் தன்னார்வ வழிகாட்டி எனும் இச்சிறிய கையேட்டை இவ்வருடம் ஹஜ் செய்ய நாடி இருக்கும் உங்கள் வசதியை கருத்தில் கொண்டு வெளியிடுகிறோம். உங்கள் கைகளின் தவழும் இந்த கையேடு நீங்கள் மக்காவில் தங்கி இருக்கும் காலகட்டங்களில் உங்கள் சிரமத்தைப் போக்கவும், இடையூறுகளைத் தவிர்க்கவும் ஓர் அழகிய வழிகாட்டியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

## தாயகத்திருந்து புறப்படும் போது கவனிக்க வேண்டியவைகள்:

- தேவைக்கு அதிகமாக பொருட்கள் மற்றும் விலையுர்ந்த பொருட்கள், நகைகள் / மொபைல் போன் போன்றவற்றை எடுத்து வருவதை தவிர்க்கவும். மேலும் உங்களின் உடமைகளில் ஏதாவது அடையாளமிட்டு தகுந்த பாதுகாப்புடன் வைத்து கொள்ளவும்.

- ஜித்தா விமான நிலையத்தில் எதிர்பாராத காலதாமதத்தினால் ஏற்படும் சிரமங்களை தவிர்க்கும் பொருட்டு உங்களின் கைப்பையோடு (Hand Luggage) தேவைக்கு ஏற்ப திண்பண்டங்கள் மற்றும் அத்தியாவசிய மருந்து மாத்திரைகளை வைத்து கொள்ளவும்.

- தொடர்ந்து மருந்து உட்கொள்ளுபவர்கள் மறக்காமல் போதுமான நாட்களுக்கு உரிய மருந்துக்களை அதற்குரிய மருந்துச்சீட்டுடன் எடுத்து வரவும். அத்துடன் இருமல், தடுமல், காய்ச்சல், மற்றும் தலைவலிக்கான மருந்துக்களையும் தவறாமல் கொண்டு வரவும்.

## மக்காவில் இருக்கும் போது கவனிக்க வேண்டியவைகள்:

- புனித ஹரம் ஷரீஃபிற்கோ மற்ற வெளியிடங்களுக்கோ செல்லும் போது கண்டிப்பாக உங்கள் அடையாள அட்டை, முஅல்லிம் கார்டு, கைகாப்பு (விபரங்கள் அடங்கிய மஞ்சள் நிற பெல்ட்) மற்றும் தங்கும் கட்டிடத்தின் முகவரி அட்டை (விசிட்டிங் கார்டு) ஆகியவற்றை கொண்டு செல்ல வேண்டும்.

- மக்காவில் பணி புரியும் உங்கள் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்களின் கைபேசி எண்களை பாக்கெட் டயரியில் குறித்து கைவசம் எப்போதும் வைத்திருங்கள். எதிர்பாராது உங்கள் செல்ஃபோன் தொலைந்து விட்டாலோ, நீங்கள் வழிதவறி போய்விட்டாலோ அது பெரும் உதவியாக இருக்கும்.

- இருப்பிடத்தில் இருந்து புனித ஹரம் ஷரிஃப் செல்லும் போதும், திரும்பும் போதும் தனியாக செல்வதை தவிர்த்து உங்கள் அறிமுகமானவர்களுடன் சேர்ந்தே செல்லவும். ஹரம் சென்று திரும்பும் பாதையை அடிக்கடி மாற்ற வேண்டாம்.

- தவாப், ச:ஃயீ மற்றும் தொழுகையின்போது ஹரம் ஷரீ:ஃபில் இருந்து பிரிந்து விட நேரிட்டால் ஒரு பிரதான இடத்தை அடையாளம் காட்டி ஒருவரை ஒருவர் தேடாமல் அமல்களை முடித்துவிட்டு அந்த குறிப்பிட்ட இடத்தில் வந்து இணைந்து கொள்ளும்படி முன்னரே உங்களுக்குள் ஆலோசித்து முடிவெடுத்துக்கொள்ளவும். (உதாரணமாக ஹரம் ஷரீ:ஃபில் வெவ்வேறு பெயர், நிறம் மற்றும் எண்களை தாங்கிய நான்கு பிரதான வாசல்கள்,மணிக்கோபுரம்(Clock tower ) , KFC உணவகம்-Opp . Gate No :79 போன்றவை ),

- மினாவில் தங்கும் ஐந்து நாட்களில் உண்பதற்கு ஏதுவான தின்பண்டங்கள் மற்றும் நீண்ட நாள் கெடாமல் இருக்கும் உணவுவகைகளை இருப்பிடத்தில் இருந்து தயார் செய்து எடுத்து செல்லவும்.

- எப்போதும் தங்கள் கைவசம் ஒன்று, ஐந்து, பத்து, ஐம்பது என ரியால்களை சில்லரையாக மாற்றி வைத்துக்கொள்ளுங்கள். இது தாகம், பசி, டாக்ஸி போன்ற அவசர தேவைகளுக்கு பெரிதும் உதவலாம்.

- வழி தவறி விட்டாலோ, பொருட்கள் காணாமல் போய் விட்டாலோ, அவர்களைத் திரும்ப தங்குமிடத்திற்கு அழைத்துச் செல்வதற்காகவும், தவறிய பொருட்களைத் திரும்ப பெருவதற்காகவும் இந்திய ஹஜ் கமிட்டியால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் மற்றும் அலுவலகங்கள் ஹரம் ஷரீ:ஃபின் வளாகதிற்குள்ளயே இருக்கின்றன. அதற்கான உதவிகள் தேவைப்படும்பட்சத்தில் எமது அமைப்பை தொடர்பு கொள்ளலாம்.

- மொழிப் பிரச்சனைகள், வழி தெரியாதவர்கள் இன்னும் அவசர மருத்துவ தேவைக்காக உதவி கிடைக்க தாமதமானாலோ, அல்லது அவர்களை நாட முடியாமல் போனாலோ கீழே தரப்பட்டுள்ள எமது நலமன்றத்தின் பொறுப்பு மிக்க உறுப்பினர்களின் கைபேசியில் தொடர்பு கொள்ளவும். எம்மால் ஆன உதவிகளை மனமுவந்து செய்ய தயாராக இருக்கின்றோம்.

**தொடர்புக்கு:-**

1 . Eng. S. பஷீர் அஹ்மது - ( 0507 325 801 )

2 . M .A .செய்யது இப்ராஹீம் (ஹில்டன்) - ( 0502 392170 )

3 . சீனா. மொஹ்தூம் முஹம்மது - ( 0551659818 )

4 . Y .M . முஹம்மது சாலிஹு - ( 0507661231 )

5 . M .N .L . முஹம்மது ரபீக் - ( 0556285134 )

6 . Eng . முஹம்மது முஹைதீன் - ( 0567857500 )

7 . V . P . முஹம்மது அலி - ( 0557416090 )

8 . Eng . M .H . நசீர் - ( 0599253426 )

ஹஜ் பயணிகள் அவர்கள் பயணத்தின் போதும் மற்றும் மக்காவில் தங்கியிருக்கும் காலங்களில் கடைப்பிடிக்க வேண்டிய சில கட்டாய நடைமுறைகள், அறிவுரைகளை ஜித்தாவில் உள்ள இந்திய துணை தூதரகம் வெளியிட்டு உள்ளது. அதன் தமிழாக்கத்தை நமதூர் ஹாஜிகளின் பார்வைக்கு கீழே தொகுத்து தந்துள்ளோம்:

1 . கசகசா (Poppy Seed ) மற்றும் ஏனைய தடை செய்யப்பட்ட மருந்து பொருட்களை எடுத்து வருவதை கண்டிப்பாக தவிர்க்கவும். இது சவுதி அரேபிய நாட்டின் சட்டப்படி மிக பெரிய குற்றமாகும்.

2 . புனித ஹரம் மற்றும் மக்கள் நெரிசல் மிக்க இடங்களுக்கு செல்லும் போது தேவையான, குறைந்த அளவு பணத்தை மட்டும் கொண்டு செல்லவும்.

3 . டாக்ஸியில் பயணம் செய்ய நேரிடும் போது மிகுந்த கவனத்துடன் செல்லவும். தனியாக பயணம் செய்வதை தவிர்க்கவும், மேலும் பயணம் செய்யும் முன் அந்த வாகனங்களில் பதிவுஎண்ணை குறித்துக்கொள்ளவும்.

4 . பெண்கள் தங்களுடைய மஹ்ரம் உடன் மட்டுமே பயணம் மேற்கொள்ளவேண்டும், தனியாக பயணம் செய்யவோ, வெளியே செல்லவோ கூடாது. பெண்களுடன் பயணம் செல்லும் நேரங்களில், ஆண்கள் முதலில் வாகனத்தில் ஏறி அமர்ந்த உடன் பெண்களை ஏற செய்யவும். அதே போல் இறங்கும் போது, முதலில் பெண்கள் இறங்கிய பிறகே ஆண்கள் இறங்கவும்.

5 . அறிமுகம் இல்லாத நபர்களிடமிருந்து எந்த ஒரு பொறுப்பையும் ஏற்று கொள்ளவேண்டாம் (பொருட்கள், உடமைகள் உட்பட).. அது நீங்கள் எளிதில் ஏமாற்றப்படுவதற்கு வழிவகுக்கலாம்..

6 . உங்கள் பொருட்கள், உடமைகள் உங்கள் கண்படும் தூரத்திலேயே வைத்துக்கொள்ளவும், அன்னியர் தரும் எந்த பொருட்களையும் கொண்டு வர வேண்டாம், மாறாக அவர்கள் உங்களுக்கு நம்பிக்கைக்குரியவர்கள் மேலும் அந்த பொருள் என்ன என்பதை அறிந்திருக்கும்பட்சதில் தவிர.

7 . புனித ஹரமிலோ அல்லது அதனை சுற்றிய பள்ளி வளாகத்திலோ கீழே கிடக்கும் எந்த ஒரு பொருளையும் எடுக்க முயற்சிக்க வேண்டாம். ஹரம் மற்றும் அதனை சுற்றி உள்ள பகுதிகளில் நிறுவப்பட்டிற்க்கும் கண்காணிப்பு கேமராவில் (CCTV) இவை பதிவு செய்யப்படுகிறது. உங்கள் உடமை அல்லாத மற்ற பொருட்களை நீங்கள் எடுக்கும்பட்சத்தில், அது திருட்டு குற்றத்திற்கு ஆளாக நேரிடும்.

8 . மொபைல் போனில் வரும் ஏமாற்று SMS அல்லது அழைப்புகளுக்கு சிக்கி விடாதீர்கள். அது போன்ற அழைப்புகள் வந்தால் பேசுவதை தவிர்த்து கொள்ளவும்.

9 . உங்கள் பாஸ்போர்ட் நகலையும், வேறு முக்கிய ஆவணங்களில் நகல்களையும் உங்களுடனோ அல்லது உங்கள் தங்கும் இடங்களிலோ பாதுகாப்பாக வைத்து கொள்ளவும்.

10 . மற்றவர்களில் வற்புறுத்தலில் பேரில் தனியார் வாகனங்களில் செல்வதை தவிர்த்து கொள்ளவும்.

மேலே தந்துள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறோம். அல்லாஹ் உங்கள் பயணங்களை எவ்வித சிரமங்களுமின்றி எளிதாக்கி, ஹஜ்ஜிக்குரிய எல்லா கடமைகளையும் பூரண ஆரோக்கியத்துடன் செவ்வனே நிறைவேற்றி அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜுடன் நலமுடன் தாயகம் திரும்ப வல்லோனிடம் இறைஞ்சிகிறோம் .

அல்லாஹ் நம் அமல்களை சீராக்கி, நம் அனைவரின் நன்மையான நாட்டங்களையும் நிறைவேற்றி வைப்பானாக! ஆமீன் !!

இறைபொருத்தத்தை மட்டுமே நாடி செய்யும் இப்பணியில் ஏதும் குறை இருப்பின் அல்லாஹ்விற்காக பொறுத்துக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்!!

**வெளியீடு:**

**ஜித்தா காயல் நல மன்றம் -**

**ஜித்தா, சவுதி அரேபியா**

Date: 23.09.2012